# குடும்பத்திலுள்ள தாய் தந்தையர் இருவரும் தொழில் புரிவதால் பிள்ளைகள் எதிர் நோக்கும் சவால்கள்: சம்மாந்துறை பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

**M. Nusrath Banu[1] , M.H. Risla Banu[2]**

[1]Department of Sociology, South Eastern University of Sri Lanka

[2]Department of Geography, South Eastern University of Sri Lanka

mnusrathbanu1@gmail.com. mhrisla97@gmail.com.

**ஆய்வுச் சுருக்கம்.**

சமூகவியல் பரப்பில் குழந்தைகள் பிரதான இடத்தினை வகிக்கின்றனர். அவர்களை பண்படுத்தி நெறிப்படுத்துவது பெற்றோரின் தலையாய கடமையாகும். இத்தகைய பணி குடும்பம் எனும் நிறுவனத்தின் ஊடாகவே செயலுரு காண்கின்றது. எனினும் முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது பெற்றோர்கள் வேலைக்கு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் குழந்தைகள் பல்வேறு சவால்களினை எதிர் கொள்கின்றனர். ஆய்வுப்பிரதேசத்தில் பல்வேறு ஆய்வுகள் இது குறித்து மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் குறிப்பாக இவ் ஆய்வுத்தலைப்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவ் ஆய்வு இடைவெளியை பூரணப்படுத்துவதற்காகவே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நாளைய தலைவர்களாகிய சிறுவர்கள் குடும்பம் எனும் மிகச்சிறிய அலகினூடாகவே வழிப்படுத்தப்பட வேண்டியவர்களாக காணப்படுகின்றார்கள். இவ்வாறான குடும்பத்தில் தாய், தந்தை இருவரும் தொழில் புரிவதால் குழந்தை வளர்ப்பில் தாய் தந்தையர்கள் குழந்தைகளோடு செலவிடும் நேரம் குறைகின்றது. இது பல்வேறு சமூக சவால்களை ஏற்படுத்தி விடுகின்றது என்பதனால் தாய், தந்தையர் இருவரும் தொழில் புரிவதால் அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகள் எதிர் நோக்கும் சவால்களை இனங்கண்டு அதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதை நோக்காக கொண்டு இவ் ஆய்வுக்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளை பெற்று கொள்வதற்காக நேரடி அவதானிப்பு, நேர்காணல், இலக்கு குழு கலந்துரையாடல்கள் மேற்கொள்ப்பட்டதுடன் இரண்டாம் நிலைத்தரவுகளை பெற்று கொள்வதற்காக சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சில தொழில் அதிகாரிகளின் அறிக்கைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள், நூல்கள் என்பனவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இவ் ஆய்வில் கண்டு கொள்ளப்பட்ட பிரதான முடிவு என்னவெனில் ஒப்பீட்டு ரீதியில் தாய், தந்தையர் இருவரும் வேலைக்கு செல்லும் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளை விட சில வகையான சமூக, உளவியல், கலாசார சவால்களை எதிர் கொள்கின்றனர் என்பதாகும். எனவே காலத்தின் தேவை கருதி இவ்வாறான ஆய்வுகள் ஆய்வுப்பரப்பில் பிரதான இடத்தினை வகிக்கின்றன எனலாம்.

திறவுச்சொற்கள் - இரட்டை கடமை உணர்வு, சிறுவர்கள், சமூகமயமாக்கம், குடும்பம், கலாசாரம்.

**ஆய்வின் அறிமுகம்.**

ஒரே மாதிரியான புவியியல் நிலப்பரப்பில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவை சமூகம் எனலாம். இக்குழுவில் உள்ளவர்களிடையே தொடர்ச்சியான சமூக உறவுகள் காணப்படும். இந்த வகையில் சமூக உறவுகளை தோற்றுவிப்பதில் திருமணம் பிரதான பங்கினை வகிக்கின்றது. பெற்றோராதல் என்றடிப்படையில் ஓர் ஆணும் பெண்ணும் பாலியல் தேவையை நிறைவு செய்வதற்காக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் ஒரு உறுதியான இணைப்பு வைத்து கொள்வது திருமணம் என அழைக்கப்படும். திருமணம் செய்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதொரு செயலாகும். திருமணம் செய்வதற்கான சக்தியும் வேட்கையும் உடைய மனிதர்களின் விஷயத்தில் அது கட்டாயாமாக வலியுறுத்தபபட்ட ஒன்றாகும். அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான், “உமக்கு முன்பும்

தூதர்கள் பலரை நாம் அனுப்பியுள்ளோம். மேலும் மனைவி மக்களுடையவர்களாகவே நாம் அவர்களை ஆக்கியிருந்தோம்.'' (13:38)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருமணம் முடித்திருந்தார்கள். மேலும் சொன்னார்கள் ''நான் திருமணம் செய்துள்ளேன். எனவே யார் எனது வழிமுறையை புறக்கணிக்கிறாரோ அவர் என்னை சார்ந்தவர் அல்லர்.'' இதனால் தான் மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள் வேட்கையுடையவர்கள் திருமணம் செய்வது அதிகப்படியான வழிபாடுகளை விட சிறந்ததாகும்.

திருமணம் சில நேரங்களில் கடமையானதொரு செயலாகிறது. எவ்வாறெனில் ஒருவர் அதிகளவு இச்சையுடையவராக இருந்தால் தடுக்கப்பட்ட செயலை செய்துவிடுதாக அஞ்சினால் அவர் திருமணம் செய்து கொள்வது கடமையாகும். ஏனெனில் அவர் தனது கற்பை பாதுகாக்க வேண்டும். தடுக்கப்பட்ட தீய நடத்தையில் வீழ்ந்து விடாமல் அவர் தன்னை காத்துக்கொள்ள வேண்டும். திருமணத்தின் நோக்கம் சுகம் அனுபவிப்பது மட்டுமல்ல அத்துடன் வேறொரு இலட்சியமும் அங்கே உண்டு. அதுதான் சிறந்ததொரு குடும்பத்தை அமைப்பதும் சீரானதொரு சமுதாயத்தை உருவாக்குவதுமாகும்.

''சந்ததியினரை பெருக்க வேண்டும் என்பதற்காக சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறையே திருமணம்.'' (கில்லன்)

''பிள்ளைகளை பெறுவதற்கும் அவர்களை பராமரிப்பதற்குமான ஒப்பந்தம் / நிகழ்வு திருமணமாகும்.'' (மனோவஸ்கி)

இவ்வாறு தாய், தந்தையர், குழந்தைகள் சேர்ந்து வாழ்வது குடும்பம் என்று அழைக்கப்படும். இந்தவகையில் எமது ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறை பிரதேசத்தில் காணக்கூடிய பெரும்பாலான குடும்பங்களில் தாய், தந்தை இருவரும் தொழில் செய்ய கூடியவர்களாகவே காணப்படுகின்றனர். இஸ்லாமிய பார்வையிலும் ஆணும் பெண்ணும் தொழில் செய்ய கூடிய உரிமை உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

''ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்குரியது. அதே போன்று பெண்கள் சம்பாதித்தவை பெண்களுக்குரியது.'' (4 : 32)


தங்களது அன்றாட வேலைகளை சிறப்பாக மேற்கொள்ள குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு, உணவு, உடை, வீடு போன்ற அடிப்படை தேவைகளை நிறைவு செய்தல் போன்ற பல்வேறு காரணிகளின் நிமித்தமே குடும்பத்தில் உள்ள பெற்றோர்கள் இருவரும் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான நிலை அங்கீகரிக்கப்படுகின்ற போதிலும் ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தைகளை சமூகமயமாக்குவதில் அக்குழந்தைகளின் தாயினதும் தந்தையினதும் பங்களிப்பு இன்றியமையாதது. ''பிறக்கும் போது ஓவ்வொரு குழந்தையும் நல்லியல்பிலேயே பிறக்கின்றது. பெற்றோரே அதனை யூதனாகவும், கிறிஸ்தவனாகவும், நெருப்பை வழிபடுபவனாகவும் மாற்றுகின்றனர்.'' என்ற இறைத்தூதரின் கருத்து பிள்ளை வளர்ப்பில் பெற்றோர்களின் செயற்பாடு எவ்வளவு ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதற்கு ஆதாரமாகும். இவர்களது தாக்கமே ஒரு குழந்தைக்கு ஆளுமை வளர்ச்சியை கற்றுக்கொடுக்கிறது. வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை கருத்துக்கள், செயல்கள், சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள் போன்றவற்றை தாய், தந்தையர் மூலமே கற்று கொள்கின்றனர். பெற்றோர்கள் தங்களது நடத்தையின் மூலம் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். இவ்வாறான முக்கிய பாத்திரமாக விளங்குகின்ற தாய், தந்தையர் இருவரும் வேலை புரிவதால் அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகள் பல சவால்களை எதிர்கொள்ள கூடிய நிலைக்குள்ளாகின்றனர்.

**ஆய்வு பிரதேசம்.**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற ஒரு பெரும் பிரதேசமே சம்மாந்துறையாகும். இலங்கையில் காணப்படும் 25 மாவட்டங்களுள் மூன்றாவது பெரிய மாவட்டமாக அம்பாறை மாவட்டம் காணப்படுகின்றது. இம்மாவட்டமானது வடக்கே மட்டக்களப்பையும், கிழக்கே வங்கக் கடலையும், தெற்கே அம்பாந்தோட்டையையும், மேற்கே மொனராகலையையும் எல்லையாக கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலக பிரிவுகளில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவும் ஒன்றாகும். இப்பிரதேசமானது 123.02 $km^2$ பரப்பையும் சுமார் 73,640 சனத்தொகையையும் கொண்டுள்ளது. அது மட்டுமன்றி இங்கு 19,923 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டும் வருகின்றனர். இங்கு முஸ்லிம்கள் மட்டுமல்லாது தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் பரங்கியர்கள் முதலானோரும் ஒற்றுமையுடன் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தங்களது பிரதான ஜீவனோபாயமாக விவசாயத்தை கொண்டிருக்கின்றனர். எனினும் இன்னும் இங்கு சில மக்கள் தங்களது கல்வி வளத்திற்கமைய அரசாங்க தொழில் வாய்ப்பினை பெற்றுக் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இப்பிரதேச மக்கள் தங்களுக்கு வருமானம் ஈட்டும் வகையிலாக வர்த்தகம், கைத்தொழில் முதலானவற்றிலும் ஈடுபாடு கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.




Retrieved from – Arc GIS

**ஆய்வுப்பிரச்சினை.**

குழந்தை வளர்ப்பில் தாய் தந்தையர்களின் கதாபாத்திரம் மிகவும் பிரதானமானது. நாளைய தலைவர்களாகிய சிறுவர்கள் குடும்பம் எனும் மிகச்சிறிய அலகின் ஊடாகவே வழிப்படுத்தப்பட வேண்டியவர்களாக காணப்படுகின்றார்கள். இவ்வாறான குடும்பத்தில் குழந்தை வளர்ப்பில் தாய் தந்தையர்கள் பிள்ளைகளோடு செலவிடும் நேரம் குறைகின்ற போது இது பல்வேறு சமூக சவால்களை ஏற்படுத்தி விடுகின்றது. இவை இறுதியில் பல்வேறு சமூக பிரச்சினைகளையும் ஏற்படுத்தி விடுவதனால் இதுவே இவ் ஆய்வினுடைய பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கம்.**

01. தாய், தந்தையர் இருவரும் தொழில் புரிவதால் அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகள் எதிர் நோக்கும் சவால்களை இனங்காணல்.
02. இச் சவால்களை தணிப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**ஆய்வு முறையியல்.**

ஆய்வினை திறன்பட செய்து முடிக்க ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இவ் ஆய்வினை திரிகை செய்வதற்கு முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாம் நிலைத்தரவு

முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானிப்பு, இலக்ககுழு கலந்துரையாடல் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டன.

நேர்காணல் முறை

சம்மாநதுறை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட கிராமப்பிரிவுகளில் வசிக்கும் தாய், தந்தையர் இருவரும் வேலைக்கு செல்லும் குடும்பங்களில் வாழ்கின்ற குடும்ப அங்கத்தவர்களிடமும், தொழிலதிகாரிகளிடமும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.

நேர்காணல் மேற்கொள்ளப்பட்டவர் தொடர்பான விபரம்

| எண் | தொழில் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பிரதேச செயலாளர் | 01 |
| 02 | கிராம நிலதாரி | 05 |
| 03 | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் | 07 |
| 04 | தொழில்புரிகின்ற பெற்றோர்கள் | 18 |
| 05 | பிள்ளைகள் | 25 |
| 06 | அதிபர்கள் | 4 |
| 07 | ஆசிரியர்கள் | 10 |

இரண்டாம் நிலைத்தரவு

இரண்டாம் நிலைத்தரவுகளாக சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சில தொழிலதிகாரிகளின் அறிக்கைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள், நூல்கள் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன.

**தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும்.**

ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் போது அந்த ஆய்வின் பிரதான பகுதியாக தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும் காணப்படுகின்றது இவ் ஆய்வுக்காக நேர்காணல், நேரடி அவதானிப்பு மற்றும் இலக்ககுழு கலந்துரையாடல் ஆகிய நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் அங்குள்ள தாய், தந்தையர் இருவரும் வேலை புரியும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள், அதிபர்கள், ஆசிரியர்கள் போன்ற சில தொழிலதிகாரிகளிடம் நேர்காணல் மூலமும், தாய், தந்தையர் இருவரும் வேலை புரியும் குடும்பங்களிற்கு சென்று நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்டதன் மூலமும் இலக்க குழு கலந்துரையாடல்கள் மூலமும் நேர்காணலில் பதிலளித்தவர்கள், பிள்ளைகளின் எண்ணிக்கையை கொண்டும் முடிவுகள் பெறப்பட்டதுடன் ஆய்வு முடிவுகளை இலகுவாக விளங்கிக் கொள்வதற்காக வரைபடம் மூலமாக அவை முன்வைக்கப்பட்டன.

**கலந்துரையாடலும் முடிவுகளும்.**

தாய், தந்தையர் இருவரும் குழந்தைகளுடைய அனைத்து செயற்பாடுகளிலும் இன்றியமையாத பாத்திரமாக காணப்படுகின்றனர். இந்நிலையில் இவர்கள் இருவரும் தொழில் புரிவதால் அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகள் பல சவால்களை எதிர் கொள்கின்றனர். இதனை எமது ஆய்வுப் பிரதேசத்துடன் தொடர்புபடுத்தி ஆராயும் போது பின்வரும் சவால்கள் இனங்காணப்பட்டன.

1. பிள்ளைகளின் அசைவியக்கம் தடைப்படல்.

அசைவியக்கம் பெரும்பாலும் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளிடம் காணப்படும் இயல்பூக்கமாகும். ஓடுதல், பாய்தல், துள்ளுதல், பொருட்களை இழுத்தல், உயரமான இடங்களில் ஏறுதல் போன்றவை விருப்பத்திற்குரிய செயலாகும். இவ்வாறான செயற்பாடுகள் தங்களுக்கு இடையூரை விளைவிக்கின்றன என்ற கண்ணோட்டத்தில் தொழில் புரிகின்ற தாய், தந்தையர் அவர்களை இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து

தடுக்கின்றனர். இதனால் ‘என்ன விளையாட உடம்மா’, ‘எங்க உம்மா காரை தரவேமாட்டா’, ‘நான் விளையாடிப்பொட்டு படிக்கன் வாப்பா எனக்கு அடிக்காதிங்க’ என்று பிள்ளைகள் தாய், தந்தையரிடம் அங்கலாய்க்கின்ற சத்தத்தை எமது ஆய்வுப்பிரதேசத்தில் நேரடி அவதானிப்பின் போது கண்டு கொள்ளப்பட்டது. இதனால் அசைவினால் பிள்ளைகளுக்கு கிடைக்கின்ற ஆரோக்கியமான உடல் நிலை, புதிய திறன்களின் கண்டுபிடிப்பு, பயன்பாடு போன்ற பல வகையான பயன்கள் கிடைக்காமல் போகின்றன.

2. மன அழுத்தத்திற்கு உள்ளாதல்.

மன அழுத்தம் இல்லாத வாழ்வை கற்பனை செய்தும் பார்க்க இயலாது. ஒரு அளவு வரை மன அழுத்தம் இருப்பது சீரான வளர்ச்சிக்கு தேவைப்பட கூடும். எனினும் மன அழுத்தம் அதிகரிக்குமானால் மன நோயை தூண்டி மன உளைச்சலை அதிகரிக்கும். குறிப்பிட்ட காரணங்கள் அறியப்படாது விட்டாலும் மன அழுத்தத்திற்கும் மன நோய்க்கும் இடையே முக்கிய தொடர்பு காணப்படுகிறது. அநேக குறைபாடுகள், பதற்றம் மற்றும் தீய நடத்தைகளுக்கு பெரும்பாலும் மன அழுத்தமே காரணமாகவும் உள்ளது. எமது ஆய்வுப்பிரதேசத்திலும் தாய், தந்தையர் இருவரும் வேலைக்கு செல்லும் குடும்பத்திலுள்ள குழந்தைகள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத நிலையிலே தனது மனதிலே புதைத்துக் கொண்டு செயலாற்றுவதால் பெரும்பாலான குழந்தைகள் மன அழுத்தத்திற்கு உட்பட்டு அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுவதில் சீரற்ற நிலையிலே காணப்படுகின்றனர்.

3. பெற்றோரின் ஊக்குவிப்பு, ஒத்துழைப்பு என்பன பெரும்பாலும் பிள்ளைகளுக்கு கிடைக்காமை.

ஊக்குவிப்பு என்பது நடத்தையை தூண்டும், வழிகாட்டும், உறுதிப்படுத்தும் ஓர் செயன்முறையாகும். அந்த வகையில் ஒருவனிடம் ஏதோ ஒரு தேவைக்காக ஆரம்பித்து அந்த தேவை நிறைவு செய்யப்படும் வரை இடம்பெறுகின்ற ஒரு உள-உடலியக்க தொழிற்பாட்டினை ஊக்குவிப்பு எனலாம். ஒத்துழைப்பு என்பது ஒரு செயற்பாட்டில் ஒன்றாக இயைந்து ஈடுபடுவதை குறிக்கும். இந்தவகையில் ஒரு பிள்ளை பிறந்தது முதல் அது நல்ல நிலையை அடையும் வரை தாய், தந்தையர் இருவரினதும் ஊக்குவிப்பும், ஒத்துழைப்பும் இன்றியமையாத விடயங்களாகும். எமது ஆய்வுப் பிரதேசத்தில் நேர்காணல், இலக்கக் குழு கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் கண்காணிக்கப்பட்ட விடயம் என்னவெனில் தாய், தந்தையர் இருவரும் வேலைக்கு செல்வதால் தன் குழந்தைகள் தங்களுக்கு ஏற்றவகையிலே செயற்பட வேண்டும் என எண்ணுகின்றனர். இதனால் குழந்தைகள் மேற்கொள்ள முடியுமான வேலையை ஊக்குவிக்காது தடுக்கின்றனர், குழந்தையின் செயற்பாட்டில் தேவைக்கு அதிகமாக தலையிடுகின்றனர், தனக்கு நேரமின்மையால் பிள்ளைகளின் வயதிற்கு ஏற்ற விடயங்களை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க ஒத்துழைப்பு வழங்காமல் தாமதப்படுத்தி பிள்ளைகளின் கவனத்தை இழக்கச்செய்வதோடு அதன் செயலூக்கத்தையும் குன்றச்செய்கின்றனர். இவ்வாறு தாய், தந்தையர் இருவரும் தங்களது வேலைகளுக்கே முன்னுரிமை கொடுத்து குழந்தைகளின் எதிர் காலத்திற்கான ஊக்குவிப்பையும், செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பையும் வழங்காததால் பல விடயங்களில் பிள்ளைகள் அறிவற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர்.

4. குழந்தைகள் நல்லொழுக்க செயற்பாடுகள், பண்பாடுகளை அறியாதவர்களாக காணப்படுகின்றனர்.

ஒரு குழந்தை பிறக்கும் போது எவ்வகையான அறிவும் அற்ற நிலையிலேயே பிறக்கின்றது. இந்த நிலையில் அவர்களை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? எவை நல்லொழுக்க செயற்பாடுகள்? எவை தீய பண்பாட்டு விடயங்கள்? என்பதை தெளிவாக உணர்த்த வேண்டும் இவ்வாறான செயற்பாடுகளில் பெற்றோர் ஈடுபட வேண்டும் என நபி மொழிகளும் எடுத்து காட்டுகின்றன.

“தாய்மார்களே! நீங்கள் கடைப்பிடிக்க விரும்புகின்ற உங்கள் குழந்தைகளுக்கு போதிக்க விரும்புகின்ற எல்லா நற்பண்புகளும் ஒரு தனி மனிதனிடம் குவிந்து கிடைப்பதில்லை. ஞானம் காணாமல் போகும் ஒரு பொருள் அதை கண்ட இடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.” (திர்மிதி)

இவ்வாறான நற்பண்புகளை தாய் தந்தையர்கள் சொல்லிக்கொடுக்க நேரம் கிடைக்காமையால் குழந்தைகள் தீய நடத்தைகளில் ஈடுபடக்கூடிய சூழ்நிலை இப்பிரதேசத்தில் காணக்கூடியதாக உள்ளது.

5. தாய் தந்தையரின் தவறான வார்த்தை பிரயோகத்தினால் உள்ளம் பாதிப்படைந்த நிலையில் குழந்தைகள் காணப்படுதல்.

பெற்றோருடைய வார்த்தை பிரயோகம் ஒரு குழந்தையினுடைய செயற்பாட்டிற்கு இன்றியமையாத ஒன்றாகும். எமது ஆய்வுப்பிரதேசத்தினை பொருத்தமட்டில் தொழில் புரிகின்ற பெற்றோரும், பிள்ளைகளும் பெரும்பாலும் இரவிலேயே சந்திக்கின்றனர். இந்நிலையில் குழந்தைகள் தாய், தந்தையரிடம் பேச முனையும் போது தங்களுடைய வேலைப்பளு காரணமாக 'சும்மாயிரு பேசாத', 'உண்ட வேலைய பாரு' போன்ற பல வகையான வார்த்தைகளை பிரயோகிக்கின்றனர். இதனால் பிள்ளைகள் உள்ளம் பாதிப்படைந்து விரக்தி நிலைக்கு உள்ளாவதோடு தன்னைச் சுற்றி நிகழும் எதையும் பொருட்படுத்தாதவர்களாகவும் மாறி விடுகின்றனர்.

6. பிள்ளைகள் சமூகமயமாகாத நிலையிலே காணப்படுகின்றனர்.

சமூகமயமாதல் என்பது ஒரு மனிதன் சமூகத்தில் ஒரு உறுப்பினராக இணைந்துகொள்ள அவன் எடுக்கின்ற முயற்சி அவனுக்கு தரப்படுகின்ற பயிற்சியாகும். ஒரு மனிதனின் சுயத்தை வளர்ப்பதிலும், ஆளுமையை வளர்ப்பதிலும் சமூகமயமாக்கம் செல்வாக்கு செலுத்துகின்றது. அதாவது ஒழுக்க விழுமியங்களையும், சமூக கட்டுப்பாட்டை பேணவும், சமூகத்திற்கு தேவையான பொருத்தமான திறமை, தகுதிகளை வளர்க்கவும், ஒருவனது சமூகவகிபங்கை படிப்பிக்கவும், பரம்பரை பரம்பரையாக பண்பாடுகளை பரிமாற்றம் செய்வதற்க்கும் சமூகமயமாக்கல் துணையாகின்றது. ஆனால் எமது ஆய்வுப் பிரதேசத்தில் பெற்றோர்கள் தொழில்புரிகின்ற நிலையிலுள்ளதால் தங்கள் குழந்தைகளுக்கு எவ்வாறு மற்றவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை கருத்துக்கள், செயல்கள், சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தாததால் பிள்ளைகள் பாரிய சவால்களை சமூகத்தின் மத்தியில் எதிர்நோக்கி வருகின்றனர்.

7. உறவுகளுக்கிடையே இடைவினை குறைந்து காணப்படுதல்.

மனிதன் ஓர் சமூக பிராணி என்றவகையில் அவன் எப்பொழுதும் சமூக உறவுகளுடன் பின்னிப்பிணைந்த சூழ்நிலையில் காணப்பட வேண்டும். இதனால் பல நன்மைகளை மனிதன் பெற்றுக்கொள்கின்றான். ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் தாய், தந்தையர் இருவரும் வேலைக்கு செல்வதால் குழந்தைகள் தங்களது வீட்டிலேயே அடைபட்ட நிலையில் காணப்படுகின்றனர். அயலவர்களது வீடுகளுக்கோ, தங்களது உறவினர்களது வீடுகளுக்கோ குழந்தைகளை அழைத்து செல்லாது விடுவதாலும், தாங்களும் குழந்தைகளை குறுகிய நேரத்திற்கே சந்திப்பதாலும் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையிலான இடைவினையும், ஏனைய சமூக உறுப்பினர்களுக்குமிடையிலான இடைவினையும் குறைகின்றது. இதனால் சமூகத்தை அறியாத குழந்தைகளாகவே காணப்படுகின்றனர். நான் நேர்காணல் மேற்கொண்ட போது ஒரு பிள்ளையுடன் அவர்களது உறவினருடைய பெயரை கேட்டு 'இவர் யார்' என வினவிய போது 'அவரு எனக்கு சொந்தமில்லை' என அப்பிள்ளை பதிலளித்தது. இவ்வாறான வகையிலேயே உறவுகளுக்கிடையிலான இடைவினை ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகிறது.

8. சமூக ஊடகங்களின் அதிக பாவணையுடையவர்களாக பிள்ளைகள் காணப்படுதல்.

சமூக ஊடகம் என்பது வலைத்தளங்களின் வழியாக தகவல், கருத்துக்கள், தொழில்சார் நலன்கள் மற்றும் வெளிப்பாட்டின் பிறவடிவங்களை உருவாக்கும் பகிர்வுக்கும் உதவும் ஊடகங்கள் ஊடாடும் கணனி நடுநிலை தொழில்நுட்பங்களாகும். இன்றைய சமூக ஊடகங்களில் நன்மைகள் கிடைக்கின்ற போதிலும் பலவகையான தீய நடத்தைகளை தூண்டுவதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. தாய், தந்தையர் இருவரும் தொழிலுக்கு செல்வதால் வீட்டிலிருந்து தொலைக்காட்சியில் ஆபாச படங்களை பார்த்தல், தொலைபேசியில் இணையத்தளங்களின் உதவியுடன் தனக்கு விருப்பமான காணொளிகளை பார்த்தல் போன்ற செயற்பாடுகளிலே அதிகம் ஈடுபடுவதால் கல்வி நடவடிக்கை பாதிப்படைகின்ற நிலையிலும் அன்றாட செயற்பாடுகள், ஆடை அமைப்புக்கள்

திரைப்படங்களுக்கு ஏற்ற வகையிலும் காணப்பட வேண்டும் என்ற நிலையில் பிள்ளைகள் செயற்படுவதாக கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.

9. கல்வியில் கவனக்குறைவாக காணப்படுதல்.


கல்வி என்பது குழந்தைகளை உடல் மற்றும் மனவளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பாகும். இளைய தலைமுறையினரை முறையாக வழிநடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ்வாறு சிறப்பித்து விளங்குகின்ற கல்வியினை தான் குழந்தைகளை சந்திக்கின்ற இரவு நேரங்களிலும் தொழில்புரிகின்ற பெற்றோர்கள் வழங்குவதில் தவறவிடுகின்றனர். தங்களது வீட்டு வேலைகள், காரியாலய பணிகள் போன்றவற்றையே முதன்மைப்படுத்துகின்றனர். இதனால் குழந்தைகளுடைய கல்வி சீரழிகின்றது. பாடசாலை ஆசிரியர்களிடமும், அதிபர்களிடமும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்ட போது தங்களது பாடசாலைகளில் காணப்படும் பிள்ளைகளில் தாய் வேலைபுரியாத குடும்பத்தை சேர்ந்த குழந்தைகளே பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு சமூகமளிப்பதாகவும், கல்வி நடவடிக்கைகளில் பெரிதும் கரிசனை செலுத்துவதாகவும் கூறினர்.

10. மார்க்க அறிவு போதிக்கப்படாமை.

ஒரு குழந்தையினுடைய அன்றாட செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கு மார்க்க அறிவு இன்றியமையாதது. இதனை கற்றுக்கொடுக்க வேண்டும், அல்குர்ஆனை ஓதும் படி வழியுறுத்த வேண்டும் என இஸ்லாம் பெற்றோரை பணிக்கின்றது. இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸை குறிப்பிடலாம்.

“உங்கள் குழந்தைகளுக்கு 3 பண்புகளை கற்றுக்கொடுங்கள். உங்கள் நபியின் மீது அன்பு வைத்தல், அவரது குடும்பத்தவர்களின் மீது அன்பு வைத்தல், அல்குர்ஆனை ஓதுதல். ஏனெனில் அல்குர்ஆனை சுமந்தவர்கள் நிழலே இல்லாத அந்நாளில் அல்லாஹ்வின் நிழலில் அவனது நபிமார்களோடும், தெரிவு செய்யப்பட்டவர்களோடும் இருப்பார்கள்.” (ஆதாரம் : தபராணி)

எமது ஆய்வுப் பிரதேசத்தினை நேரடி அவதானிப்பு செய்ததன் மூலம் கண்காணிக்கப்பட்ட விடயம் என்னவெனில் பெற்றோர்கள் மார்க்க அறிவை குழந்தைகளுக்கு அறிவூட்டுவதற்கு நேரமற்றவர்களாகவும் அவர்களை ஒழுங்கான வழிமுறைக்குட்படுத்த தவறுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் 5 நேர தொழுகையைக் கூட ஒழுங்கான முறையில் பிள்ளைகள் நிறைவேற்ற முடியாத சூழல் காணப்படுகின்றது.




மூலம்: நேர்காணல்

**ஆய்வின் பரிந்துரைகள்.**

மேற்குறித்த சவால்களை எதிர்கொள்வதற்காக பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கலாம்.

- குறைந்தது தாயானவள் தனது வீட்டிலிருந்து குழந்தைகளை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.
- பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை நல்ல விடயங்களின்பால் வழிகாட்ட வேண்டும்.
- பிள்ளைகளுடைய ஒழுக்க விடயங்களில் பெற்றோர்கள் அவதானமாக செயற்பட வேண்டும்.
- பிள்ளைகளினுடைய தனிமையை குறைத்தல்.
- பிள்ளை விரும்பக்கூடிய அதன் வயதிற்க்கேற்ற அதற்கு முடியுமான எந்த முயற்சியிலும் செயற்பட சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- பிள்ளைகளின் கடமைகளை செய்வதற்கான மிகச்சரியான, இலகுவான, விரைவான வழிமுறைகளை கற்பித்தல்.
- பெற்றோர்கள் பிள்ளை தவறு விடும் போது பொறுமையை கையாள்தல்.
- பிள்ளைகளின் முயற்சிகளை பாராட்டல், தவறுகளை கண்டித்தல்.
- உறவினர்களது வீடுகளுக்கு பிள்ளைகளை அழைத்துச்சென்று உறவுகளை பலப்படுத்தல்.
- பிள்ளைகள் அடுத்தவர்களிடையே தேவையுடையோராக இருக்கக்கூடிய நிலையினை பெற்றோர்கள் குறைக்க வேண்டும்.

**ஆய்வின் முடிவுரை.**

நாளைய தலைவர்களாகிய சிறுவர்கள் குடும்பம் எனும் அலகினூடாகவே வழிப்படுத்தப்பட வேண்டியவர்களாக காணப்படுகின்றார்கள். இந்நிலையில் ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறை பிரதேசத்தில் பெரும்பாலான குடும்பங்களில் உள்ள தாய் ,தந்தையர் இருவரும் தொழில் செய்ய கூடிய நிலையில் உள்ளதால் அவர்களது பிள்ளைகள் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர். இத்தகைய நிலையினை குறைந்தது தாயானவள் வீட்டிலிருந்து குழந்தைகளை பராமரிப்பதன் மூலமும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்காக அதிக

நேரம் செலவளித்து அவர்களை கண்காணிப்பதுடன் நல்ல முறையில் வழிப்படுத்துவதன் மூலமும் பிள்ளைகளை சமூக சவால்களில் இருந்து மீட்டெடுக்க முடியும்.

**உசாத்துணைகள்**


1. இத்ரீஸ்,ஏ.பி.எம்.(2014),"அபாயகரமான வார்த்தை", காகம் பதிப்பகம், வாழைச்சேனை.

2. இத்ரீஸ்,ஏ.பி.எம்.(2005),"இஸ்லாத்தில் சிறுவல் உளவியல்",AJ Prints (pvt) Ltd. Dehiwala.

3. சிவதாஸ்,எஸ்.(2005),"நலமுடன்",ஈகுவாலிற்றி கிராப்பிக்ஸ், கொழும்பு.

4. றமீஸ் அபூபக்கர்.(2018) "சமகால சமூக பிரச்சினை", Excelent print, சாய்ந்தமருது.

5. மௌலவி கே.ஜே. மஸ்தான் அலி பாகவி உமரி.(1996),"திருமணம்", இஸ்லாமிக் சென்டர் உனைஸா, சவூதி அரேபியா.

6. மௌலானா சையத் ஜலாலுத்தீன் உமரி.(2010). "பெண்களும் இஸ்லாமும்", Islamic Foundation, சென்னை.

7. http://www.battinews.com/2018/01/blog-post_184.html?m=1